# தமிழ்த்தூது
# வண.பிதா.தனிநாயகம் அடிகளார்



கலாநிதி அகளங்கன்

# தமிழ்த்தூது

# வண.பிதா.தனிநாயகம் அடிகளார்.

**கலாநிதி அகளங்கன்**

**வெளியீடு**

**வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்-29**

**பதிப்பாசிரியர்**

**திரு.முருகேசு கௌரிகாந்தன்** M.A.M.Ed.,

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி)

# தமிழ்த்தூது வண.பிதா.தனிநாயகம் அடிகளார்
## (வரலாறு)


| | | |
|---|---|---|
| எழுதியவர் | : | அகளங்கன் (நா.தர்மராஜா) |
| வகை | : | சிறுவர் இலக்கியம் |
| முகவரி | : | தமிழ் அதர் |
| | | 90, திருநாவற்குளம், |
| | | வவுனியா. |
| பதிப்புரிமை | : | திருமதி. பூ.தர்மராஜா. B.A. (Hons) |
| முதற்பதிப்பு | : | 20.02.2014 |
| வெளியீடு | : | வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம். |
| அச்சுப்பதிப்பு | : | வாணி கணனிப்பதிப்பகம், |
| | | இல.85, கந்தசாமி கோவில்வீதி |
| | | வவுனியா.024-2223658 |
| **விலை** | : | **ரூபா** 50/- |


# ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்”

# வெளியீட்டுரை

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் 2014 பெப்ரவரி மாதத்துடன் 17ஆண்டுகளை நிறைவுசெய்து 18வது ஆண்டில் காலடி எடுத்துவைத்திருக்கும் இவ்வேளையில் தனது 29வது நூலை தமிழறிஞர் அகளங்கன் அவர்களின் படைப்பாக வெளியிடுவதில் மகிழ்வடைகிறது. "தமிழ்த்தூது வண.பிதா.தனிநாயகம் அடிகளார்" என்னும் நூலை அன்னாரின் நூற்றாண்டு நினைவையொட்டி மாருதம் 14இதழில் அகளங்கன் அவர்கள் எழுதிய கட்டுரையை சகல தமிழ் ஆர்வலர்களுக்கும் கிடைக்கும்படியாக ஒரு சிறு நூலாக வெளியிடுகிறோம்.

இந்நூல் வண.பிதா.தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப் பணிகளை எடுத்தியம்புவது ஒரு சிறப்பாகும். அத்துடன் எழுத்தாளர் அகளங்கனின் மணிவிழா காலத்தையொட்டி அவர்தம் தமிழ்ப்பணியை அங்கீகரிக்கும் நூலாகவும் இது அமைகிறது. எவ்வாறு அடிகளார் தமிழின் தூதாக உலகெங்கும் தமிழ் ஆய்வை பரப்பிநின்றாரோ தமிழறிஞர் அகளங்கன் அவர்களும் தமது ஆசிரியப் பணியிலிருந்து 55வயதில் இளைப்பாறி வவுனியா பிராந்திய மட்டத்திலும், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கொழும்பு என தேசிய மட்டத்திலும், இந்தியா சுவிட்சர்லாந்து என சர்வதேச மட்டத்திலும் தமிழ்ப்பணி ஆற்றிவருவது கண்கூடு.

இன்றைய பின்-நவீனத்துவ காலகட்டத்தில் நவீன இலக்கியப் பரிச்சயத்தோடு பாரம்பரிய தமிழ் இலக்கிய இலக்கண விடயங்களில் தாடனம் நிரம்பப் பெற்றவர் தமிழறிஞர் அகளங்கன் என்றால் மிகையாகாது. 40க்கும் மேற்பட்ட நூல்களின் சொந்தக்காரர். பாரம்பரிய இலக்கியங்களை வெறுமனே சுவைக்காக அசைபோடாமல் சிந்தனைக்கு விருந்தாகவும், நவீன விமர்சன ஓட்டத்திற்கு இணையாகவும் ஆய்வு செய்யும் தன்மையும், பண்பும் கொண்டவர் இவர். அத்தகைய ஒருவரின் சிறப்பையும், பின்னணியையும் இந்நூலில் அவரது மணிவிழாக்காலத்தில் இணைத்து தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு அளிப்பதில் மகிழ்வடைகிறோம்.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் வெறுமனே தமிழ்ப்பணி என முன்னெடுப்பதை விடுத்து மனுக்குல நிலையில் தமிழ் மக்கள் வாழ்வின் பாடுகளை, பண்பாடுகளை, வெளிப்படுத்தவும் பதிவு செய்யவும் முனைப்புடன் தொடர்ந்து பாடுபடும் என்பதை இத்தால் பதிவு செய்ய விரும்புகிறோம். மக்களின் பேராதரவை வேண்டி இந்நூலை வெளியிட்டு மீண்டும் ஒரு நூலுடன் விரைவில் சந்திக்க விழைகிறோம்.

**கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன்**
செயலாளர், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்.
சிரேஷ்ட ஆங்கில மொழி கற்பித்தல் விரிவுரையாளரும்,
மொழிபெயர்ப்பு கற்கைகள் இணைப்பாளரும், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.
15.02.2014

# முன்னுரை

தமிழ்த்தூது வண.பிதா.தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் உலகின் பல பாகங்களிலும் சிறப்பாக நடந்தேறி இருக்கின்றன.

சிறப்பு மலர்கள் வெளியிடப்பட்டன. சஞ்சிகைகள், அட்டைப்பட அதிதி ஆக்கியும், தனி இதழ்கள் வெளியிட்டும் சிறப்பித்தன. பத்திரிகைகள் கட்டுரைகளை வெளியிட்டன.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம். மாதாந்த முழுநிலா நிகழ்வொன்றை (20.08.2013 ல்) அடிகளாரின் சிறப்பு நிகழ்வாக ஏற்பாடு செய்து அடிகளாரை நினைவு கூர்ந்தது.

வட்டம் தனது 16ஆண்டு நிறைவு விழாவை (15.01.2014) அடிகளாரின் நூற்றாண்டு நினைவு விழாவாகவும் கொண்டாடியது. அன்று வெளியிடப்பட்ட மாருதம் இதழ் 14ல் அடிகளார் அட்டைப்பட அதிதியாக்கி கௌரவப்படுத்தப்பட்டார்.

அவ்விதழில் அடிகளார் பற்றி நான் எழுதிய கட்டுரையை மாணவர்கள் நலன் கருதி தனிநூலாக்க வட்டம் விரும்பியது. அதன் விளைவே இந்நூல்.

இந்நூலுக்கு வெளியீட்டுரை வழங்கிய வட்டத்தின் செயலாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் அவர்களுக்கும், என்னைப்பற்றி எழுதிய இந்நூலின் பதிப்பாசிரியர் திரு.மு.கௌரிகாந்தன் அவர்களுக்கும், அட்டைப்படத்தை வரைந்த ஓவியர் ஆசை இராசையா அவர்களுக்கும் என் நன்றி.

வவுனியா இந்து மாமன்றத்தலைவர் கலாபூசணம், இறைபணிச்செம்மல் வை.செ. தேவராஜா அவர்கள் ஊர்காவற்றுறை சிற்பனையில் பிறந்தவர். அவரின் துணைவியார் அமரர் பாலாம்பிகை அவர்கள் ஊர்காவற்றுறை கரம்பன் மேற்கில் பிறந்தவர்.

இதனால் அடிகளாரின் பிறந்த ஊரான கரம்பனில் பிறந்த தனது மனைவி அமரர் பாலாம்பிகை அவர்களின் நினைவாக இந்நூலின் வெளியீட்டுச் செலவின் ஒருபகுதியை அவர் ஏற்றுள்ளார். அவருக்கு என் நன்றி.

மாணவர்களின் நலன்கருதி வெளியிடப்படும் இந்நூலுக்கு பெரியோர்களின் ஆதரவை பெரிதும் எதிர்பார்க்கிறேன்.

அகளங்கன்

# தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளார்

- **கலாநிதி அகளங்கன்** -



இந்து சமுத்திரத்தின் எழில் முத்து எனத் திகழும் **இலங்கை** மணித்திருநாட்டின் வடமாகாணத்து **யாழ்ப்பாண** மாவட்டத்தில் **ஊர்காவற்றுறைப்** பிரதேசத்தில் **கரம்பன்** என்னும் சிற்றூரில் **1913 ஆகஸ்ட் 02** இல் ஒரு தமிழ் ஞாயிறு உதயமானது.

ஆசிரியராகவும், உப தபாலதிபராகவும் பதவி வகித்த **நெடுந்தீவு** என்னும் தீவைச் சேர்ந்த **நாகநாதன் கணபதிப்பிள்ளை ஹென்றி ஸ்ரனிஸ்லாஸ், கரம்பன்** என்னும் சிற்றூரைச் சேர்ந்த **பஸ்தியாம்பிள்ளை சிசில் இராசம்மாவைக்** கரம்பற்றிப் பெற்ற அந்தத் தமிழ் ஞாயிறுக்கு **1913 ஆகஸ்ட் 21**இல் ஊர்காவற்றுறை புனித மரியாள் தேவாலயத்தில் ஞானத்திருமுழுக்காட்டி **சேவியர் நிக்கலஸ் ஸ்ரனிஸ்லாஸ்** எனப் பெயரிட்டு, **சேவியர்** எனச் செல்லமாக அழைத்தனர்.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆங்கிலப் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்ற **(1918 - 1922)** சேவியர், கேம்பிரிட்ஜ் உயர் பிரிவுவரை **யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி**யில் கல்விகற்றார். **(1923 - 1930).**

கல்லூரியில் கல்விகற்ற காலத்தில் தமிழ், ஆங்கிலம், வரலாறு, புவியியல் என்னும் பாடங்களில் தங்கப் பதக்கம் பெற்றார். ஆற்றல் மிக்க மாணவனாகத் திகழ்ந்த அவர் அக்கல்லூரியின் **பொட்டில்ட் சன்சைன்** (**Bottled Sun Shine**) என்னும் மலரின் ஆசிரியராகப் பணியாற்றிப் பல ஆங்கிலக் கட்டுரைகளை எழுதினார்.

இந்தச் சஞ்சிகையில் 1928 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் **எனது விருப்பத்துக்குரிய வரலாற்று நாயகன் - நெப்போலியன்.** (My Favorite Hero in History - Napoleon) என்ற ஆங்கிலக் கட்டுரையை எழுதினார். இதுவே இவரது முதல் ஆக்கமாக வெளிவந்தது.

அறிவுப் பசியும், தேடலில் பெரு விருப்பும் கொண்டவரான இவர், கல்லூரியில் யாவராலும் மதிக்கப்பட்டார். தனது கல்லூரிக்கும், ஆசிரியர்களுக்கும், பெற்றோருக்கும் மகிழ்ச்சியையும், பெருமையையும் அள்ளி வழங்கிச் சிறப்பித்தார்.

கல்லூரியின் இறுதி ஆண்டுக் காலத்தில் இவர் வாசித்த **லியோ டால்ஸ்டாய்** எழுதிய **புத்துயிர்ப்பு** (Resurrection) என்ற நூலும், **ட்ரம்மண்ட்**

(Drummond) என்னும் அறிஞர் எழுதிய கருத்துக்களும் இவரது உள்ளத்தில் மதகுருவாகி சமூக சமயப் பணிகளைச் செய்ய வித்திட்டன.

தாயாரின் பெரு விருப்பும் அதுவாக இருந்த காரணத்தால் முதலில் **யாழ் குருத்துவக் கல்லூரி**யில் சேர்ந்தார். பின்பு **கொழும்பு புனித பேர்னாட் இறையியற் கல்லூரியில்** (St Bernard Seminary) சேர்ந்து இறை பணிக்கான பயிற்சியைப் பெற்றார்.

**1931 முதல் 1934 வரை** அங்கு பயின்ற இவரது குருத்துவக் கல்வி முடிவுற்றதும் சிறிது காலம் தான் கற்ற புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

இவருக்கு **ரோம்** நகரிலுள்ள **இறையியற் கல்லூரியில்** (Collegeode Propaganda Fide) **மறைக்கல்வி** கற்க அனுமதி கிடைத்தது. இருப்பினும் அங்கு செல்ல வாய்ப்புக் கிடைக்கவில்லை.

1934இல் **இந்தியக் கேரளத்து திருவனந்தபுரம் ஆயர் மார்க் இவானியோஸ்** அவர்கள் இவரை கொழும்பில் சந்தித்து தன்னோடு **திருவனந்த புரத்துக்கு** அழைத்துச் சென்றார்.

இவரது அறிவு ஆற்றல் ஆர்வம் என்பவற்றைக் கண்டு மகிழ்ந்த பேராயர் இவரை மறைக் கல்வி கற்பதற்காக **ரோமாபுரியிலுள்ள உர்பன் பல்கலைக் கழகத்துக்கு** அனுப்பிவைத்தார்.

அதே காலத்தில் இறையியற் கல்லூரியில் மறைக் கல்வி கற்றுத் தேறினார். இக் கல்லூரியில் கற்ற **முதல் தமிழ் மாணவன்** என்ற சிறப்பையும் பெற்றார்.

ரோம் நகரில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் இவரும் இன்னும் ஏழு பேரும் சேர்ந்து **வீரமா முனிவர் கழகம்** என்ற பெயரில் ஒரு கழகத்தினை நிறுவி தமிழ் படித்தனர்.

**வத்திக்கான் வானொலி** நிலையத்தில் இருந்து பல தடவைகள் தமிழில் ஒலிபரப்புச் செய்யும் வாய்ப்பும் இவருக்குக் கிடைத்தது. அதன் மூலம் தன் பெருவிருப்பான **தேமதுரத் தமிழோசையை உலக மெங்கும் பரப்பும்** அரிய பணியை மகிழ்ச்சியோடு ஆற்றினார்.

**19.03.1938** இல் ரோமா புரியில் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார். அப்பொழுது பெற்றோர் தமக்கிட்ட சேவியர் என்னும் பெயருடன் தனது தந்தை வழி மரபுப் பெயரான **தனி நாயகம்** என்பதையும் இணைத்துக் கொண்டார்.

அன்று முதல் **வண பிதா சேவியர் தனி நாயகம் அடிகளார்** என்று அழைக்கப்பட்டார். அப்பெயரே பின்பு **வண பிதா தனி நாயகம் அடிகள்** என்று ஆயிற்று.

**1939இல் ரோம்** நகரத்து **குருத்துவப் பல்கலைக் கழகத்தில் மறையியலில் அருட் கலாநிதிப் பட்டத்தை** (Ph.D.) பெற்றபின் இந்தியாவிற்குத் திரும்பி வந்து ஓராண்டுக் காலம் கேரள மாநிலத்து திருவனந்த புரத்தில் பணியாற்றினார்.

**1940 ஆம் ஆண்டு தமிழகத்துத் தூத்துக் குடிக்கு** அருகில் உள்ள **வடக்கன் குளம்** என்ற கிராமத்தில் இருந்த **தூய திரேசாள் உயர் நிலைப் பெண்கள் பள்ளியில் துணை அதிபராகவும், ஆசிரியராகவும்** பணியாற்றினார். **(1940 - 1945)**

ரோம் நகரில் கல்விகற்ற காலத்தில் பல மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருந்தும் தமது தாய் மொழியான தமிழில் பாண்டித்தியம் பெறவில்லையே என்ற கவலை அவரது உள்ளத்தை உறுத்தியது.

அதைப் போக்க **பண்டிதர் குருசாமி சுப்பிரமணிய ஐயர்** என்பவரிடம் நான்காண்டுகள் முறைப்படி தமிழைக் கற்றார்.

தமிழ் மொழி மேலுள்ள பெரும் ஆர்வத்தால் **சென்னையிலுள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில்** படித்து தமிழில் பாண்டித்தியமும் பட்டமும் பெறவிரும்பினார்.

தமிழில் **முதுகலைமாணி(M.A)**க் கல்வி கற்கப் போதுமான அடிப்படைக் கல்விச் சான்றிதழ்கள் எதுவும் இவரிடம் இல்லாதிருந்தபோதும், இவரது தமிழ் அறிவையும் ஆர்வத்தையும் இவருக்கிருந்த **இலத்தீன், எபிரேயம், இத்தாலியம், பிரெஞ்சு, ஸ்பானிஸ், ஜேர்மன், ஆங்கிலம்** முதலான மொழிகளிலிருந்த அறிவையும் கண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக நிர்வாகத்தினர் அனுமதி அளித்தனர்.

**தமிழை** சிறப்புப் பாடமாகவும் **ஆங்கில இலக்கியம் ஆங்கில மொழி** என்பவற்றைத் துணைப் பாடங்களாகவும் கொண்டு கல்வி கற்று **1947 இல்** முதுகலை மாணிப் பட்டப் படிப்பை நிறைவு செய்து **முதுகலை மாணிப் பட்டம்** (M.A) பெற்றார்.

அத்தோடு தொடர்ந்து ஆராய்ச்சி மாணவனாகக் கல்வி கற்று, **பழந் தமிழ் இலக்கியத்தில் இயற்கை** என்னும் பொருளில் ஆய்வு செய்து **1949இல் இலக்கிய முதுகலைமாணி** (M.Lit)ப் பட்டம் பெற்றார். அவரது ஆய்வேடு Nature in Ancient Tamil Poetry என்ற பெயரில் வெளிவந்தது.

**1952இன்** ஆரம்ப காலத்தில் **தூத்துக் குடியில்** பணியாற்றியபோது தமிழ்ப்பண்பாட்டையும், தொன்மையையும், சிறப்பையும் ஆராய்வதற்கும் பரப்புவதற்கும் என **தமிழ் கல்சர்** (Tamil Culture) என்ற பெயரில் ஆங்கிலத்தில் முத்திங்கள் சஞ்சிகை ஒன்றை உலகளாவிய சஞ்சிகையாக வெளிக்கொணர்ந்தார். தாமே முதன்மை ஆசிரியராகவும் பணிபுரிந்தார்.

**1966ஆம்** ஆண்டுவரை வெளிவந்த இச்சஞ்சிகையில் இவர் **24 ஆய்வுக் கட்டுரைகளை** எழுதினார். தமிழ் அறிஞர்களது மட்டுமன்றி பிறமொழி அறிஞர்களதும் தமிழியல் தொடர்பான கட்டுரைகள் பல அச்சஞ்சிகை இதழ்களில் காலந்தோறும் இடம் பெற்றன.

**1952 இல் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் கல்வித் துறை விரிவுரையாளராக** நியமனம் பெற்றார். **கொழும்பில் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தை** நிறுவினார்.

**1955 முதல் 1957 வரை லண்டன் பல்கலைக்கழகத்தில், பண்டைக்கால ஐரோப்பிய இந்தியக் கல்வி முறைமைகள் ஓர் ஒப்பீடு,** என்ற தலைப்பில் சிறப்பாகத் தமிழ்க் கல்வி மரபினை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்தார்.

பண்டைக் கால ஐரோப்பிய மரபுவழிக் கல்வி முறையினையும், தமிழ்க் கல்வி முறையினையும் ஒப்பியல் நோக்கில் ஆராய்ந்து **கல்வியியற் கலாநிதிப்பட்டத்தை 1959இல்** பெற்றார். (Educational Thought in Ancient Tamil Literature)

**1952 முதல் 1961 வரை** இலங்கைப் பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்த பின் நாட்டின் அரசியலில் ஏற்பட்ட பாரபட்சமான செயற்பாடுகளைக் கண்டு தலையிட்டு வேதனையுற்று அப் பதவியை விட்டுத் துறந்து நாடுகடந்து சென்றார்.

**1961 முதல் 1969 வரை மலேசியா நாட்டின் மலேயாப் பல்கலைக் கழகத்தில் இந்திய இயல் துறையில் துறைத் தலைவராகவும், தமிழ்த் துறைப் பீடாதியாகவும், பேராசிரியராகவும் பணிபுரிந்தார்.**

**07.01.1964 இல் இந்திய நாட்டில் டில்லியில் விர்ய பவனில்** நடைபெற்ற **அகில உலக கீழ்த்திசை மா நாட்டில்** கலந்து கொண்ட அடிகளார் தனது நண்பர் **வ.ஐ.சுப்பிரமணியம்**, அவர்களோடு ஆலோசித்து **07.01.1964 நண்பகல் 12 மணியளவில்** அறிஞர்களை ஒன்று கூட்டி **உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம்** (International

Association of Tamil Research - I.A.T.R) என்ற மன்றத்தை உருவாக்கினார்.

கீழை நாட்டு மேலை நாட்டு அறிஞர்கள் என இருபத்தாறு அறிஞர்கள் கலந்து கொண்ட அக்கூட்டத்தில் இலங்கைத் தமிழ் அறிஞர்களாக, **அடிகளாரோடு, பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை, பண்டிதர் க.பொ.இரத்தினம்** ஆகியோர் கலந்து கொண்டனர்.

மன்றத்தின் **தலைவராக பாரீஸில்** உள்ள **பிரான்ஸ் கல்லூரிப் பேராசிரியர் ழான் ∴ பீலியோசாவும், இணைச் செயலாளர்களாக அடிகளாரும், ப்ராக் சார்லர் பல்கலைக்கழகப் பேராசிரியர் கமில் சுவலபில்லும்** தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**1966 ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் நாள் முதல் 23ஆம் நாள் வரையும்** உலகின் 22 நாடுகளிலிருந்து தமிழ் அறிஞர்களும், தமிழில் ஈடுபாடு கொண்ட அறிஞர்களுமாக **140 பேராளர்களும், 40பார்வையாளர்களும்** கலந்து கொண்ட **முதல் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை மலேசியத் தலை நகர் கோலாலம் பூரில்** கோலாகலமாக நடாத்திக் காட்டினார் அடிகளார்.

முழுக்க முழுக்க ஆங்கில மொழியில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் வாசிக்கப்பட்ட ஆராய்ச்சி மாநாடாகவே அது விளங்கியது. அடிகளாரின் நோக்கமும் அதுவாகவே இருந்தது.

**1968 ஆம் ஆண்டு சனவரி 3 முதல் 10 வரை தமிழகத்தின் சென்னையில்** நடந்த **இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு** வழிகாட்டியாகவும் அடிகளார் விளங்கினார். இம் மாநாடு கலை நிகழ்ச்சிகளையும் உள்ளடக்கிய பெருவிழாவாக நடைபெற்றது.

**1970ஆம் ஆண்டு யூலை மாதம் 15ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை பிரெஞ்சு நாட்டின் தலைநகரான பாரிஸ் நகரத்தில். மூன்றாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடந்தது** அடிகளாரின் பெரு முயற்சியில் இம்மாநாடு சிறப்பாக நடந்தேறியது.

**நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு இலங்கை யாழ்ப்பாணத்தில் 1974ஜனவரி மாதம் 3ஆம் நாள் தொடக்கம் 10ம் நாள் வரை** வெகு சிறப்பாக நடைபெற்றது. **பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைவராக செயற்பட்டார்.** அடிகளார் வழிகாட்டினார்.

இந்த நான்கு மாநாடுகளும் அடிகளாரின் காலத்தில் அடிகளாரின் வழிகாட்டுதலிலும் உழைப்பிலும் சிறப்பாக நடந்தேறின.

1970 ஆம் ஆண்டில் **பாரிஸ் நகரின் பிரான்ஸ் கல்லூரியில் இணைப் பேராசிரியராகவும், 1971 ஆம் ஆண்டு இத்தாலி நேப்பிள்ஸ் பல்கலைக்கழகப் பேராசிரியராகவும்** பணிபுரிந்தார்.

அடிகளார் கல்லூரியில் படித்த காலத்தில் வாசித்த அறிஞர் ட்ரம்மன்ட் இன் கூற்று அவரது உள்ளத்தில் ஓயாது ஒலித்துக் கொண்டிருந்தது.

"நான் இவ்வுலகில் ஒரு முறைதான் வாழ முடியும். எனவே நான் இறக்கும் வரை என்னால் இயன்ற அளவு எல்லா நற்செயல்களையும் செய்தல் வேண்டும். ஏனெனில் நான் மீண்டும் ஒரு முறை வாழப்போவதில்லை." என்பதே அக்கூற்று

அக் கூற்றுக்கிணங்க தன் வாழ் நாட்களை மிகவும் பெறுமதியுடைய நாட்களாகக் கழித்தார். இலங்கை சாகித்திய மண்டல உறுப்பினர் **(1961)** சென்னை மாநில தமிழ் வளர்ச்சிக்குழு உறுப்பினர் **(1963)** சென்னைப் பல்கலைக் கழக ஆங்கில - தமிழ் அகராதிக் குழு உறுப்பினர் **(1963)** சென்னை அரசு குழந்தைகள் மூத்தோர் பாடநூல் குழுத் தலைவர் **(1964)** மலேசிய இஸ்லாமியக் கல்விக்குழு உறுப்பினர் **(1961 - 1963),** மலாயாப் பல்கலைக் கழகக் கல்வித்துறைப் பாடக் குழுவின் கலைப்புல உறுப்பினர். மலாயா கல்வித் துறைக் கலைக்குழு உறுப்பினர் **(1961 - 1966)** மலாயாப் பல்கலைக் கழக பேராசிரியர் பெருமன்ற உறுப்பினர் **(1961 - 1966)** மலேசிய இலக்கிய ஆணைக்குழு உறுப்பினர் **(1961 - 1966)** மலாயாப் பல்கலைக்கழக மாணவர் நல ஆணைய உறுப்பினர், மலாயா உயர்நிலை கேம்பிரிஜ் மேனிலை வகுப்புக்களின் தமிழ்த் தேர்வாளர் **(1961 - 1969)** மலாயா பாடத் திட்டக் குழு உறுப்பினர் **(1963 - 1964)** எனப் பல்வேறு பதவிகளை வகித்து தன் வாழ்வை அர்ப்பணித்தார்.

ரோம் நகரில் ஒரு சாலை மாணவராகப் பயின்ற தன் நண்பரும், அப்போது **யாழ்ப்பாண ஆயராக** விளங்கியவருமான **பேரருள்திரு தியாகுப்பிள்ளை ஆண்டகை** அவர்களின் ஏற்பாட்டில் **யாழ்ப்பாணத்தில் வளலாய் என்னும் கிராமத்தில்** அடிகளார் தங்கியிருந்த **(1972 செப்ரெம்பர் - 1979 ஜீலை)** காலத்தில் **யாழ்ப்பாணக் கல்லூரியின் சிறப்புப் பேராசிரியராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினராகவும்** பணியாற்றினார்.

தமிழ் மொழியின் தொன்மையையும், தமிழர் பண்பாட்டின் சிறப்பியல்புகளையும் உலகத்திற்கு எடுத்தியம்புவதற்காக

**50 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்குச் சென்று** அங்குள்ள **பல்கலைக் கழகங்களில் ஆங்கிலத்திலும் அவர்களது மொழிகளிலும்** உரையாற்றி இருக்கிறார்.

வடமொழி இலக்கியங்களே இந்திய இலக்கியங்கள் என்று கருதியிருந்த மேலைத் தேயத்து அறிஞர்களுக்கு இவரது சொற் பொழிவுகள் தமிழை ஆராய வேண்டும், கற்க வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தின. **"இந்தியப் பண்பாடு கங்கையோடு முடிந்து விடவில்லை. காவிரிக்கும் வாருங்கள்."** என அறைகூவல் விடுத்தார்.

தனது சொற் பொழிவுகளிலெல்லாம் **"என்னை நன்றாக இறைவன் படைத்தனன். தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"** என்ற திருமூலர் வாக்கையும், **"யாதும் ஊரே யாவரும் கேளிர்"** என்ற புற நானூற்றுப் புலவர் பெருந்தகை **கணியன் பூங்குன்றனாரின்** பொன்னான வாக்கையும், **"பெரிதே உலகம் பேணுர் பலரே" "எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே"** முதலான சங்க இலக்கியப் பாடல் வரிகளையும் சொல்லிக் காட்டி, தனது தமிழ்ப்பற்றையும், தமிழரின் உலகளாவிய சகோதரத்துவ சிந்தனையையும் வெளிப்படுத்தினார். **"யாதானும் நாடாமால் ஊராமால்"** என்ற திருக்குறள் கருத்தின் சிறப்பையும் பேசினார்.

**"உண்டால் அம்ம உலகம்..."** எனத் தொடங்கும் **புற நானூற்றுப்** பாடலை உரக்கச் சொல்லித் தமிழரின் நனி நாகரிகத்தை உலகின் ஒப்புயர் வற்ற தனி நாகரிகமாகப் பறை சாற்றினார். தமிழை **"பக்தியின் மொழி"** என்று சிறப்பித்துக் கூறினார். தனது சொற் பொழிவுகளில் சிலவற்றைத் தொகுத்து **"தமிழ்த் தூது"** என்ற நூலாகவும் வெளியிட்டார்.

"**ஒன்றே குலம்**" என்ற தமிழ்ப் புலவரின் கொள்கையில் உறுதியான பற்றுக் கொண்டிருந்த அடிகளார் தாம் சென்ற சென்ற நாடுகளில் எல்லாம் தாம் கண்ட கேட்ட, தமிழோடும் தமிழரோடும் தொடர்பு பட்ட விடயங்களைத் தொகுத்து **"ஒன்றே உலகம்"** என்றதோர் உயரிய நூலை வெளியிட்டார். சிறந்த பல கட்டுரைகளை வரைந்தார்.

ஐரோப்பிய அமெரிக்க நூல் நிலையங்களில் முடங்கிக் கிடந்த தமிழ்க் கையெழுத்துப் பிரதிகளையும், தமிழ் நூல்களையும், ஏட்டுச் சுவடிகளையும் தேடிக் கண்டு பிடித்து, தமிழ் ஆய்வாளர்களின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

இந்திய மொழிகளுக்குள்ளும், கிழக்காசிய மொழிகளுக்குள்ளும் அச்சுவாகன மேறிய முதல் மொழி தமிழ் மொழியே என்பதைக் கண்டறிந்து உலகிற்குத் தெரிவித்தார்.

**ஜே. வி. செல்லையாவின் பத்துப்பாட்டு ஆங்கில மொழி பெயர்ப்பு, திராவிடர் வரலாறு** முதலான நூல்கள் வெளிவர ஏற்பாடு செய்தார். **சைமன் காசிச் செட்டி** எழுதிய தமிழ்ப் புலவர்கள் பற்றிய **த தமிழ் புளூற்றாக்** (The Tamil Plutarch) என்ற ஆங்கில நூல் **தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரின்** மேலதிக தகவல்களோடு வெளிவர ஏற்பாடு செய்தார்.

**இலங்கையில் தமிழ்ப் பண்பாடு** (Tamil Culture in Ceylon) பற்றிய **எம்.டி.ராகவனின்** ஆங்கில நூற்பிரதிகளை யாழ்ப்பாணத்தில் நடை பெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது பேராளர்களுக்கு வழங்கினார்.

அத்தோடு பல்வேறு நாடுகளில் பல்வேறு அறிஞர்கள் மேற்கொண்ட தமிழியல் ஆய்வுகள் குறித்த தகவல்கள் ஒழுங்கு படுத்தப்பட்டு வெளிவரக் காலாக இருந்தார்.

அவற்றில் **தமிழியல் நூல்கள் ஆய்வடக்கம்** (A Reference Guide to Tamil Studies) **வெளிநாடுகளில் தமிழ் ஆய்வு** (Tamil Studies Abroad), **தமிழ்ப் பண்பாடும் நாகரிகமும்** (Tamil Culture and Civilization) ஆகிய நூல்கள் விதந்து ஓதத்தக்கன.

**1969** இல் தொடங்கப்பட்ட Journal of Tamil Studies என்ற ஆய்விதழுக்கு முதல் ஆசிரியராக அடிகளே பொறுப்பேற்று நான்கு இதழ்களை வெளியிட்டார். இதன் முதல் இதழில் **"இருபதாண்டு காலத் தமிழ் ஆய்வுகள்"** என்ற தலைப்பில் **1949 முதல் 1969** வரையிலான தமிழ் ஆய்வுகளைப் பற்றி கட்டுரை எழுதினார்.

உலகம் முழுவதும் **தமிழ்த் தூதாய்** உலா வந்த தனிநாயகம் அடிகளாரை **"கடந்த ஆயிரம் ஆண்டுகளில் தனிநாயகம் அடிகளாரைப் போலத் தமிழுக்குத் தொண்டாற்றியவர் வேறு எவருமிலர்"** என தென்னிந்தியத் திருச்சபையின் **யாழ் ஆதீன முன்னாள் ஆயர் சபாபதி குலேந்திரன்** அவர்கள் எழுதியது யாவரும் ஏற்றுக் கொண்ட உண்மைக் கூற்றே. சற்றும் மிகையில்லை.

**"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்"** என்ற மகாகவிபாரதியின் கனவை நனவாக்கிய அடிகளார் **பண்டத் தரிப்பிலுள்ள** தியான இல்லத்தில் **1979 ஜீலை மாதம்** முதல் தங்கியிருந்து தன் வாழ்வின் இலட்சியத்தை இரை மீட்டார்.

உடல் நலம் குன்றிய நிலையில் **1980 செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி மாலை 6.30 மணியளவில்** தம் பூதவுடல் நீத்துப் புகழுடல் பெற்றார்.

தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை அன்றோ. உலகளாவிய தமிழ்ப் பணிய்யயே உயிர் மூச்சாகக் கொண்டு

ஓயாது பணியாற்றிய உத்தமத் தமிழ் ஞாயிறு அஸ்தமனமாகியது. இருப்பினும் தமிழ்ப் பற்றாளர் உள்ளங்களில் அது மீண்டும் உதிக்கும் என்பதே உண்மை.

**எட்டு மொழிகளில்** பாண்டித்தியமும் இன்னும் **ஏழு மொழிகளில்** மிகுந்த பரிச்சயமும் கொண்டிருந்த **தமிழ்த் தூது தனி நாயகம் அடிகளார்,** இறைமொழி கற்று அம்மொழியில் எம் தமிழ்ப் பெருமையை எடுத்துரைக்க இறையுலகு சென்று விட்டார்.

இப் பூவுலகில் **தமிழ் ஒளி பரப்பிய எழில் ஞாயிறு, விண்ணுலகில் தமிழ் ஒளி பரப்ப** விடைபெற்றுச் சென்று விட்டது. இனி நம் பணி **எங்கும் தமிழ், எதிலும் தமிழ், எப்போதும் தமிழ்,** என்பதே. அதுவே அடிகளாருக்கு நாம் செய்யும் நன்றிக்கடன்.

**வாழ்க தமிழ். வளர்க தமிழ் ஆய்வுப் பணிகள். உலகம் முழுவதும் தமிழ் ஒலிக்க உறுதுணையாவோம். வாழ்க தனிநாயகம் அடிகளார் பெரும் புகழ்.**

**உசாத்துணை நூல்கள்**


1. **ஞானம் 159, ஆகஸ்ட் 2013 இதழ்**

நன்றி
1. ஆசிரியர் தி.ஞானசேகரன்
2. பேராசிரியர் சபா.ஜெயராசா
3. பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா
4. அதி.வண.கலாநிதி.எஸ்.ஜெபநேசன்
5. பேராசிரியர் சு.சுசீந்திரராஜா
6. பேராசிரியர் சி.தில்லைநாதன்
7. பேராசிரியர் துரை.மனோகரன்
8. பேராசிரியர் செ.யோகராசா
9. அருட்திரு. தமிழ்நேசன் அடிகள்
10. முதுநிலை விரிவுரையாளர் க.இரகுபரன் 2.

தமிழாழி :- **தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழாச் சிறப்புமலர். மன்னார் தமிழ்ச்சங்கம் ஓகஸ்ட் 2013.**

நன்றி
1. அருட் திரு. தமிழ்நேசன் அடிகளார்
2. அருட் தந்தை. செ.அன்புராசா
3. இதழ் ஆசிரியர் திரு.எம்.சிவானந்தன்

3. **தமிழ்நாயகம் 1913 - 2013. தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாமலர். யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் - யாழ்ப்பாண மறை மாவட்டம்.**

நன்றி
1. பேராசிரியர் அ.சண்முகதாஸ்
2. கலாநிதி ஸ்ரீ பிரசாந்தன்
3. முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்
4. மலர் ஆசிரியர் அருள் திரு.செ.அன்புராசா

4. **கலைமுகம் இதழ் 56 ஒக்ரோபர் டிசெம்பர் 2013**

நன்றி. கலாநிதி, பண்டிதர் செ.திருநாவுக்கரசு

# கலாநிதி தமிழ்மணி அகளங்கன்

**திரு. முருகேசு கௌரிகாந்தன் M.A,M.Ed.,**
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் தேசிய கல்வியியுற் கல்லூரி)

வவுனியா பம்பைமடுவில் நாகலிங்கம் நல்லம்மா தம்பதிகளின் மகனாக **1953.12.04**ல் பிறந்து பம்பைமடு அ.த.க.பாடசாலை மற்றும் வ/தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆரம்ப இடைநிலைக் கல்வியை நிறைவேற்றி சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரியில் உயர்தரக் கல்வியைப் பெற்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமாணிப் பட்ட நெறியில் (கணித, புள்ளி விபரவியல் பாடங்கள்) பயின்ற வேளையிலே எழுத்துலகில் தீவிரமாகப் பிரவேசித்து சிரித்திரன் இதழில் தனது மரபு இலக்கியம் சார்ந்த கட்டுரைகளை வரையத் தொடங்கினார்.

ஒரு சொற்பொழிவாளராக, ஒரு கவிஞராக, புனைகதை எழுத்தாளராக, மரபு இலக்கியக் கட்டுரையாளராக, நாடக எழுத்தாளராக, சஞ்சிகை மலர் ஆசிரியராக எனப் பல்வேறு பரிமாணங்களில் தனது கலை இலக்கியப் பணிகளை மேற்கொண்டுவரும் கலாநிதி அகளங்கன் அவர்கள் நாற்பதுக்கு மேற்பட்ட நூல்களை, மலர்கள் சஞ்சிகைகளை ஆக்கியுள்ளார்.

## அகளங்கனின் நூல்கள்

1. "செல்" "வா" என்று ஆணையிடாய் - (அஞ்சலிக் கவிதை)
2. சேரர் வழியில் வீரர் காவியம் - (குறுங்காவியம்)
3. சமவெளி மலைகள் - (அகளங்கன், சு.முரளிதரன் கவிதைகள்)
4. வாலி - (ஆய்வு நூல் - மூன்று பதிப்புகள்.
   சிறந்த இலக்கிய ஆய்வு நூலுக்கான இலங்கை இலக்கியப் பேரவைச் சான்றிதழ் 1987 - 1988)
5. இலக்கியத் தேறல் - (கட்டுரைகள்)
6. நளவெண்பா - (கதை)
7. அன்றில் பறவைகள் - (வானொலி நாடகங்கள் -
   தேசிய சாகித்திய மண்டலப் பரிசு 1992)
8. முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் - (வரலாறு)
9. இலக்கியச் சிமிழ் - (கட்டுரைகள் -இரு பதிப்புகள்)
10. தென்றலும் தெம்மாங்கும் - (கவிதைகள்)
11. பன்னிரு திருமுறை அறிமுகம் - (சமயம்)
12. மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள் - (ஆய்வு)
13. இலக்கிய நாடகங்கள் - (வானொலி நாடகங்கள் - வடக்கு, கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசு 1994,
    கொழும்புத் தமிழ்ச் சங்கப்பரிசு 1994)
14. ஆத்தி சூடி - (விளக்கவுரை)
15. கொன்றை வேந்தன் - (விளக்கவுரை)
16. அகளங்கன் கவிதைகள் - (வடக்கு - கிழக்கு மாகாண சாகித்திய மண்டலப் பரிசு 1996)
17. வாக்குண்டாம் (மூதுரை) - (விளக்கவுரை)
18. சிவபுராணம் - (பொருளுரை)
19. செந்தமிழும் நாப்பழக்கம் - (பேச்சுக்கள்)
20. நாமறிந்த நாவலர் - (சிறுகுறிப்புகள் - இருபதிப்புகள்)

21. நல்வழி (பொழிப்புரை – விளக்கவுரை)
22. இசைப் பாமாலை – (வானொலி மெல்லிசைப் பாடல்கள், மற்றும் இசைப் பாடல்கள்)
23. கவிஞர் ஜின்னாஹ்வின் இரட்டைக் காப்பியங்கள் ஓர் ஆய்வு – (ஆய்வு)
24. இலக்கியச் சரம் – (கட்டுரைகள்)
25. வெற்றி வேற்கை (நறுந்தொகை) – (உரை)
26. கூவாத குயில்கள் – (வானொலி, மேடை நாடகங்கள்)
27. திருவெம்பாவை – உரை – (சமயம்)
28. பாரதப் போரில் மீறல்கள் – (கட்டுரை)
29. சுட்டிக் குருவிகள் – (மழலைப் பாடல்கள்)
30. சின்னச் சிட்டுக்கள் – (சிறுவர் பாடல்கள்)
31. நறுந் தமிழ் – (கட்டுரைகள்)
32. பாரதியாரும் பாஞ்சாலி சபதமும் – (ஆய்வு)
33. பத்தினித் தெய்வம் – (நாட்டிய நாடகங்கள் – வடமாகாண சிறந்த நாடக நூல் பரிசு –2008)
34. வேரும் விழுதும் – (கட்டுரைகள், வடமாகாண சிறந்த இலக்கிய நூல் பரிசு –2008)
35. கங்கையின் மைந்தன் – (வானொலி, மேடை நாடகங்கள்– வடமாகாண சிறந்த நாடகநூல் பரிசு 2009, தமிழ் நாடு கலை இலக்கியப் பெருமன்ற சிறந்த நாடக நூல் பரிசு 2010, தமிழியல் விருது 2009, இலங்கை இலக்கியப் பேரவைப் பரிசு 2009, தேசிய சாகித்திய மண்டல சிறப்புச் சான்றிதழ் 2009)
36. பந்து அடிப்போம் – (சிறுவர் பாடல்கள்)
37. சிரிக்க விடுங்கள் – (சிறுவர் பாடல்கள்)
38. சகல கலா வல்லி மாலை – (உரை)
39. அலைக்குமிழ் – (நாவல், தேசிய சாகித்திய மண்டல சிறப்புச்சான்றிதழ் 2011, கொடகே தேசிய சாகித்திய சிறப்புச் சான்றிதழ் 2011, இலங்கை இலக்கியப் பேரவை சிறப்புச் சான்றிதழ் 2011,தமிழியல் விருது 2011)
40. சின்னஞ்சிறிய சிறகுகள் (குழந்தைப் பாடல் – தேசிய சாகித்திய மண்டலப் பரிசு 2012, வடமாகாண சிறந்த சிறுவர் இலக்கியப் பரிசு 2012, தமிழியல் விருது 2012)
41. கம்பனில் நான் – (கட்டுரைகள்)
42. முற்றத்துக் கரடி – (சிறுகதைகள்)
43. வண.பிதா.தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் – (வரலாறு)

இலங்கை மத்திய அரசின் சாகித்திய விருது (இரண்டு தடவைகள்) கலாபூஷணம் விருது, தமிழ்மணி விருது, வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் விருது, வடக்கு கிழக்கு மாகாண நூற்பரிசுகள், வடக்கு மாகாண நூற்பரிசுகள் மற்றும் தேசிய ரீதியிலும் உலகளாவிய மட்டத்திலும் பல்வேறு பரிசில்களையும் பாராட்டுக்களையும்,

காவிய மாமணி(1990), தமிழ்மணி(1993) திருநெறிய தமிழ் வேந்தர்(1995) கவி மாமணி(1997) தமிழ் அறிஞர்(1998), பல்கலை எழில்(1998), புராண படன வித்தகர்(1999), புராணபடன புகழ்தகை(1999), சிவனருட்செல்வர்(2001) வாகீச கலாநிதி(2002), செஞ்சொற் செல்வர்(2007) வித்தியா சுரபி(2008), முத்தமிழ்க் கலைச்சுடர்(2010), தமிழியல் வித்தகர்(2010), செந்தமிழ்க் கொண்டல்(2010), முத்தமிழ்ச் சுரபி(2010), கௌரவ கலாநிதி(2011), நாவலர் விருது(2011) கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை விருது(2012),

முதறிஞர் கலாநிதி சொக்கலிங்கம் (சொக்கன்) விருது(2012) இலக்கியச் சுடர்(2013), சைவத் தமிழியற்கோ (2013), கலாபூஷணம்(2013) முதலான விருதுகளையும் பெற்றுள்ளார்.

இவரது பல கட்டுரைகள், கவிதைகள், நாவல், சிறுகதைகள், ஈழநாடு, முரசொலி, ஈழமுரசு, வீரகேசரி, தினகரன், தினக்குரல் முதலான பத்திரிகைகளிலும் பல சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையில் பல சமூக, இலக்கிய நாடகங்கள், மெல்லிசைப் பாடல்கள் ஒலிபரப்பாயின. கவியரங்கம், பேச்சு, பேட்டி கவிதைக்கலசம் போன்ற பல நிகழ்வுகளில் இவர் வானொலி தொலைக்காட்சி ஊடகங்களில் பங்கேற்றிருக்கிறார். இவரது வானொலி நாடகங்கள் பல அவுஸ்ரேலியா, கனடா, I.B.C வானொலிகளில் ஒலிபரப்பாயின.

இவர் பற்றியும் இவர் ஆக்கங்கள் பற்றியும் யாழ் பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழகம், சப்ரகமுவ பல்கலைக்கழகம் முதலியவற்றில் மாணவர்கள் ஆய்வு செய்து பட்டம் பெற்றுள்ளனர்.

பட்டி மன்றம், வழக்காடு மன்றம், கவியரங்கம், கலைநிகழ்வுகள் போன்றவற்றுக்கு தலைமை வகித்துவருவதுடன், சமய தொடர் சொற்பொழிவுகள், புராண படனம், போன்றவற்றையும் நிகழ்த்தி வருகிறார்.

வவுனியா கலைஇலக்கிய நண்பர்கள் வட்டம், வவுனியா மாவட்ட எழுத்தாளர் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும் பணிபுரிகிறார்.

**இவர் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்.**

1. “அகளங்கன் ஆக்கங்கள் ஒரு கண்ணோட்டம்” கலை முதற் தேர்வுக்காக திரு.சு.ஜெயச்சந்திரன் கிழக்குப் பல்கலைக்கழகம் (1992)
2. “அகளங்கன் ஆக்கங்கள் ஓர் ஆய்வு”. கலை முதற் தேர்வுக்காக செல்வி.க.சாந்தி யாழ் பல்கலைக்கழகம் (1993)
3. “அகளங்கன் ஆக்கங்கள் ஓர் ஆய்வு”. கலை இறுதித் தேர்வுக்காக செல்வி.சசிரஜனி புலேந்திரன் சப்ரகமுவ பல்கலைக்கழகம் (2002)
4. “வவுனியா தமிழ்ப் புலவர் தமிழ்மணி அகளங்கன் ஐயா அவர்களின் பாடல்களில் ஆடலாக்கம்” நடனமாணிப் பட்டத்திற்கான (B.FA) ஆய்வு. (வெளிவாரி) யாழ் பல்கலைக்கழகம். திருமதி. சூரியயாழினி வீரசிங்கம்(2003)
5. “அகளங்கனின் இலக்கியப் பணி” ஓர் ஆய்வுக்கண்ணோட்டம் செல்வி.சோபிதா தெய்வேந்திரராசா. சிறப்புக் கலைமாணித் தேர்வுக்காக. யாழ் பல்கலைக்கழகம்(2003)
6. “எழுத்தாளர் அகளங்கனின் நாடகங்கள் ஓர் ஆய்வு” செல்வி இன்பமதி மச்சயராசா கலை இறுதித் தேர்வுக்காக, சப்ரகமுவ பல்கலைக்கழகம்(2004)
7. “அகளங்கனின் இலக்கியப் படைப்புக்கள்” செல்வி வி.சுலக்சனா தேசிய கல்வியியற் கல்லூரி மட்டக்களப்பு(2008)
8. “தமிழ் இலக்கியம் - கட்டுரைகள்” இந்த ஆய்வில் “இலக்கிய அறிஞர்கள்” பகுதியில் “இலக்கிய அறிஞர் தமிழ்மணி அகளங்கன்” எனும் தலைப்பில் இவர் பற்றிய ஆய்வு சேர்க்கப்பட்டுள்ளது. செல்வி வனிதா வரதராஜா நூலக டிப்ளோமா தகவல் விஞ்ஞான தரம் 2 பகுதி 2 பாடநெறியினை பூர்த்தி செய்வதற்கு எழுதப்பட்டது(2010)

நன்றி... திருமதி. பூரணேஸ்வரி தர்மராஜா அகளங்கன்

# தமிழ் வாழ்த்து

இசைத்திட முடியாது எங்கள் பெருமை – தமிழ்
இன்பமோ சொல்லினிலே சொல்லல் அருமை
திசைதோறும் எங்கள்மொழி செய்யும் புதுமை – இது
தேவர்க்கும் கடவுளர்க்கும் என்றும் இனிமை.

(இசைத்....)

பக்தியின் மொழி தமிழாம்
பரவசந் தரும் புதிராம்
நித்தியம் வளம் பெருகும்
நிகரிலா மொழி தமிழாம்.

கம்பனும் வள்ளு வரும்
கவிஇளங் கோவுந் தந்த
செம்மை மிகு கவிதை
சிந்தை தனை நிறைக்கும்.

(இசைத்.....)

ஔவையின் அறி வுரைகள்
அருண கிரிப் புகழ்கள்
செவ்வை மிகு தமிழில்
சேக்கிழார் தரும் கவிகள்

மூவர் தமிழ் அமுதும்
முடி மன்னர் ஆதரவும்
தேவர் களும் பருகும்
திருவா சகப் பொலிவும்

(இசைத்....)

நல்லூர் நா வலரும்
நல்ல விபு லானந்தரும்
பல்லோர் புகழ்ந் தேத்தும்
பாரதி வள்ள லாரும்

குமர குரு பரரும்
குரு தாயு மானவரும்
உமறுப் புல வரொடு
உயர் வீர மாமுனிவர்.

(இசைத்....)

கவிஞர் அகளங்கன்.